அமைக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. தென் மாவட்டங்களிலே, ஒரு வனப்பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பயிற்சியாளர்களுக்குப் பொருள்கள் தேவைப்படுவதால் அதை யொட்டி ஒரு சிறிய பொருட்காட்சி சாலை வைக்கப் பட்டிருக்கிறது. அணையைப் பார்க்க வருகின்றவர்கள் எந்தக் கட்டணமும் இல்லாமல் அதைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். பிறிதொரு பொருட்காட்சியைப்பற்றி இப்பொழுது குறிப்புகள் இல்லை.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, அந்த வைகை அணைக் கட்டில் பெரிய மிருகக் காட்சி சாலையை வைக்காவிட்டாலும், ஒரு சில மிருகங்களைக் கொண்டு, சிறிய சிறிய மிருகங்கள் இருக் கின்றன, அதையெல்லாம் வைத்து சிறிய மிருகக்காட்சி சாலை யாவது அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் என்னென்ன என்பதற்குப் பட்டியல் தரட்டும். அதற்குப் பிறகு யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் சிறிய சிங்கம், சிறிய புலியைக் கொண்டா அமைப்பது ?

*Madras-Tirupathy buses*

* 247 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce smaller buses in Madras-Tirupathy route; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

**(இ)** இவ்வினாவிற்கு இடமில்லை.

*1973 மார்ச் 5]*

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, சென்னைக்கும் திருப்பதிக்கும் துரித வண்டிகளை விடுவது இப்பொழுது இல்லை என்றாலும், சென்னைக்கும் திருப்பதிக்கும் ஏராளமான பக்தர்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், ஏன் லட்சோப லட்சம் மக்கள் சென்று வருவதால் அங்கே துரித வண்டிகளை விடுவதன் மூலம் வருவாயும் கிடைக்கும், வசதிகளும் ஏற்படும். ஆகவே இந்த இரண்டையும் மனத்திற்கொண்டு அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னையிலிருந்து கீழ்திருப்பதி வரையிலேயும் செல்லுகின்ற பஸ்கள் திருப்பதி மலைமேலும் செல்லக்கூடிய அளவில் சிறிய பேருந்துகளாக விடப்படுமா என்பது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்துள்ளதைப்போல், பல்லாயிரக்கணக்கான மக்கள், என் லட்சக்கணக்கான மக்கள் செல்ல நம்முடைய அரசின் தரப்பிலே 6 பஸ்களும், ஆந்திர அரசின் தரப்பிலே 6 பஸ்களும் ஆக 12 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. கே. கந்தசாமி:** தலைவரவர்களே, திருப்பதி கோயிலுக்கு யாத்திரை செல்லக்கூடியவர்கள் இன்னும் அதிகமாக ஆக வேண்டும். அப்படிச் செல்லுகின்றவர்கள் போதிய போக்கு வரத்து வசதியின்மையால் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்த பிறகும் சிறிய பஸ்களை விடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? ஏன் அதை விரைவில் விடக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சிறிய பஸ்கள் விடுவதாலே போதுமான பயணிகள் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே, சாதாரணமாக பெரிய பேருந்துகளே திருப்பதிக்குச் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். திருப்பதி தேவஸ்தானத்தைப் பொறுத்தவரையில் மலையிலே அவர்கள் ஏற்றிச் செல்கிறார்கள். ஆனால் ஆந்திரப் பிரதேசத்தின் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இந்த பஸ்கள் நேராகச் செல்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாக என்னிடத்திலே கொஞ்ச நாட்களுக்கு முன்னால், அதாவது முல்கி போராட்டம் நடப்பதற்கு முன்னால் சொன்னார்கள். இன்னொரு வழிப்பாதை தயாராக இருப்பதால் ஒருவழிப்பாதைக்கு ஏற்பாடு